**Hindu Temple and Cultural Society of USA Inc.**
**Sri Venkateswara Temple (Balaji Mandir) and Community Center**
**1075 Route 202/206, Bridgewater, New Jersey 08807**
**(908)725-4477**
**www.venkateswara.org**

# A Compilation of Tamil Rhymes and Songs For Children

HTCS-December 2012

# Dedicated

# To

# Lord Sri Venkateswara

# of

# New Jersey, USA

# A Compilation of Tamil Rhymes and Songs For Children

# Preface

This book is a compilation of a variety of traditional Tamil rhymes and songs. Scripts are presented both in Tamil, and English. These Books will become wonderful learning tools for children in the HTCS Language classes in particular and the community as a whole. As we place similar Books in The Temple website (www.venkateswara.org), global access becomes very easy. While most of the materials used in this compilation are taken from several books and internet postings, a few original songs are also included.

These Tamil rhymes and songs were compiled and word processed by Mrs. Ramya Raghavan, Mr. Rajesh Raghavan, and Dr. A. R. Srinivasan. The continuing support of HTCS for educational activities in our Temple is very much appreciated. Eventually, more such books will be added to our web.

May The Lord Sri Venkateswara of New Jersey Shower His Best on all of us!

**HTCS – December 2012**

# Contents

Desiya Geetham
தேசிய கீதம்

Thamizh Thai Vazhththu
தமிழ் தாய் வாழ்த்து

Naaikkutty
நாய்க்குட்டி

Kai Veesamma Kai Veesu
கை வீசம்மா கை வீசு

Muyal
முயல்

Amma Inge Va Va
அம்மா இங்கே வா வா

Pachchai Kili Paadum
பச்சைக் கிளி பாடும்

Maram Valarppom
மரம் வளர்ப்போம்

Yaanai
யானை

Thodar Vandi
தொடர் வண்டி

Engal Amma
எங்கள் அம்மா

Pattam Poochi
பட்டாம் பூச்சி

Oodi Vilaiyadu Pappa
ஓடி விளையாடு பாப்பா

Salai Vidhigal
சாலை விதிகள்

Vaanam Karuththal Mazhai Peiyum
வானம் கருத்தால் மழை பெய்யும்

Sol Ondru Porul Irandu
சொல் ஒன்று பொருள் இரண்டு

Tam Tam Dum Dum
டம் டம் டும் டும்

Nathaiamma
நத்தையம்மா

En Panthu
என் பந்து

Chellakkutty
செல்லக்குட்டி

Kaai Kaai Kaai
காய் காய் காய்

Vanna Vanna Pookkal
வண்ண வண்ண பூக்கள்

Vaa Mazhaye Vaa Vaa
வா மழையே வா வா

Sollunga Sollunga Sollungua
சொல்லுங்க சொல்லுங்க சொல்லுங்க

Aaru Suvaigal
ஆறு சுவைகள்

Thambi Thambi
தம்பி தம்பி

Ondru Irandu Moondru
ஒன்று இரண்டு மூன்று

Thosai Amma Thosai
தோசை அம்மா தோசை

Yanaiyare Yanaiyare
யானையாரே யானையாரே

Kulla Kulla Vaaththu
குள்ள குள்ள வாத்து

Salavaikkarar
சலவைக்காரர்

Chinna Chinna Motor
சின்ன சின்ன மோட்டார்

Engal Vettu Poonai
எங்கள் வீட்டு பூனை

Mazhaye Mazhaye
மழையே மழையே

Puththi Ulla Kakkai
புத்தி உள்ள காக்கை

Aththanai Perum Amma
அத்தனை பேரும் அம்மா

Appa thantha motorgal
அப்பா தந்த மோட்டார்கள்

Lattum Thattum
லட்டும் தட்டும்

Mamphazham
மாம்பழம்

Kizhamai Pattu
கிழமை பாட்டு

Vellai Muyal
வெள்ளை முயல்

Tho Tho Naai Kutty
தோ தோ நாய் குட்டி

Seithith Thaal
செய்தித் தாள்

Thottam Niraya Chedigal
தோட்டம் நிறைய செடிகள்

Kaalaiyil Ezhundavudan
காலையில் எழுந்தவுடன்

Vaanaththil Parakkum
வானத்தில் பறக்கும்

Venkatesa Venkatesa
வெங்கடேசா வெங்கடேசா

Krishna Krishna New Jerseyk Krishna
கிருஷ்ணா கிருஷ்ணா நியூ ஜெர்ஸிக் கிருஷ்ணா

Orr Ezhuththu Vaarthaigal
ஓர் எழுத்து வார்த்தைகள்

Ding Dong Ding Dong
டிங் டாங் டிங் டாங்

Engal Mozhi Nalla Mozhi
எங்கள் மொழி நல்ல மொழி

Kutty Kutty Pappa
குட்டி குட்டி பாப்பா

Kuruvi Paranthu Vanthathaam
குருவி பறந்து வந்ததாம்

Aadu Pappa
ஆடு பாப்பா

Kai Kottu
கை கொட்டு

Saainthaadu
சாய்ந்தாடு

## தேசிய கீதம்
## Desiya Geetham

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
Jana Gana Mana Adinayak Jaya He

பாரத பாக்ய விதாதா
Bharatha Bhagya Vidatha

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
Punjab Sindu Guratha Maratha

திராவிட உத்கல பங்கா
Dravida Uthkala Vanga

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
Vindhya Himachala Yamuna Ganga

உச்சல ஜலதி தரங்கா
Uchchala Jaladhi Taranga

தவ சுப நாமே ஜாகே
Tava Subha Naame Jaage

தவ சுப ஆசிஸ மாகே
Tava Subha Ashisha Maghe

காஹே தவ ஜய காதா
Gaahe Tava Jaya Gaatha

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
Jana Gana Mangala Dayaka Jaya He

பாரத பாக்ய விதாதா
Bharatha Bhagya Vidatha

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
Jaya He Jaya He Jaya He

ஜய ஜய ஜய ஜய ஹே!
Jaya Jaya Jaya Jaya He!

*-மஹாகவி இரவீந்திரநாத தாகூர்*
*(Mahaakavi Ravidranath Tagore)*

---

## தமிழ்த்தாய் வாழ்த்து
## Tamizhththaai Vaazhththu

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
Neeraarum Kadaluththa Nilamadandaik Kezhilozhugum

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
Seerarum Vadanamenath ThigazhBharatha Kandamithil

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
Thekkanamum AthirSirantha Dravidanal Thirunaadum

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
Thakkasiru Pirainuthalum Dariththanarun Thilakamume

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
Atthilaka Vaasanaipol Anaiththulagum Enbamura

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே
தமிழணங்கே

Ethisaiyum Pugazhmannakka Erunthaperun Tamizhanannge!
Tamizhanannge!

உன் சீரிளமைத் திறம்வியந்து
Un Seerillamaith Thiramviyanthu

செயல்மறந்து வாழ்த்துதுமே
வாழ்த்துதுமே
வாழ்த்துதுமே

Seyalmaranthu Vaazhththuthume!
Vaazhththuthume!
Vaazhththuthume!

*'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை*
*(Manonmaniyam Pe. Sundaram Pillai)*

---

## நாய்க்குட்டி
## Naaikkutti

தோ... தோ... நாய்க்குட்டி,
Tho… Tho… Naaikkutti,

துள்ளி வா வா நாய்க்குட்டி.
Thulli Vaa Vaa Naaikkkutti.

உன்னைத் தானே நாய்க்குட்டி,
Unnaith Thaane Naaikkutti,

ஓடி வா வா நாய்க்குட்டி.
Oodi Vaa Vaa Naikkutti.

கழுத்தில் மணியைக் கட்டுவேன்;
Kazhuththil Maniyai Kattuven;

கறியும் சோறும் போடுவேன்.
Kariyum Sorum Poduven.

இரவில் இங்கே தங்கிடு.
Eravil  Inge Thangidu.

எங்கள் வீட்டைக் காத்திடு!
Engal Veetaik Kaathidu!

*-அழ. வள்ளியப்பா*
*(Azha. Valliyappa)*

---

## கை வீசம்மா! கை வீசு!
## Kai Veesamma! Kai Veesu!

கை வீசம்மா, கை வீசு!
Kai Veesamma, Kai Veesu!

கடைக்குப் போகலாம் கை வீசு!
Kadaikku Pogalaam Kai Veesu!

மிட்டாய் வாங்கலாம் கை வீசு!
Mittai Vaangalaam Kai Veesu!

மெதுவாய்த் தின்னலாம் கை வீசு!
Methuvaaith Thinnalaam Kai Veesu!

கோவிலுக்குப் போகலாம் கை வீசு!
Kovillukku Pogalaam Kai Veesu!

கும்பிட்டு வரலாம் கை வீசு!
Kumbittu Varalaam Kai Veesu!

---

## முயல்
## Muyal

வெள்ளை முயல் ஓடுது
Vellai Muyal Ooduthu

வேகமாக ஓடுது
Vegamaga Ooduthu

குள்ள முயல் ஓடுது
Kulla Muyal Ooduthu

குதித்துக் குதித்து ஓடுது.
Kuthithuk Kuthithu Ooduthu.

முத்துப் போன்ற கண்ணினால்
Muthup Pondra Kanninaal

மேலும் கீழும் பாக்குது.
Melum Keezhum Paakuthu.

தத்தித் தத்தி விண்ணிலே
Thathith Thaththi Vinnile

தாவிக் குதிக்கப் பாக்குது.
Thaavi Kuthikkap Paakkuthu

நெட்டையான காதையே
Nettaiyaana Kaathaye

நீட்டி நீட்டி ஆட்டுது.
Neeti Neeti Aattuthu.

குட்டையான வாலையே
Kuttaiyaana Vaalaye

குறு குறுன்னு ஆட்டுது.
Kuru kurunnu Aattuthu.

*–பொதட்டூர் புவியரசன்*
*(Pothattur Bhuviarasan)*

---

## அம்மா இங்கே வா வா
## Amma Inge Vaa Vaa

அ அம்மா இங்கே வா வா!
A Amma Inge Vaa Vaa!

ஆ ஆசை முத்தம் தா தா!
Aa Aasai Muththam Thaa Thaa!

இ இலையில் சோறு போட்டு
I Ilaiyil Soru Pottu

ஈ ஈயைத் தூர ஓட்டு
Ii Iiyai Thoora Oottu

உ உன்னைப் போல நல்லார்
U Unnai Pola Naallar

ஊ ஊரில் யாவர் உள்ளார்?
Uu Uuril Yaavar Ullar?

எ என்னால் உனக்குத் தொல்லை
E Ennal Unakkuth Thollai

ஏ ஏதும் இங்கே இல்லை
Ee Eethum Inge Illai

ஐ ஐயம் இன்றிச் சொல்வேன்
I Iyyam Enri Solven

ஒ ஒற்றுமை என்றும் பலமாம்
O Otrumai Enrum Balamaam

ஓ ஓதும் செயலே நலமாம்
Oo Oothum Seyale Nalamaam

ஔ ஔவ்வை சொன்ன மொழியாம்
Au Auvai Sonna Mozhiyaam

ஃ அஃதே எனக்கு வழியாம்
Ak Akthe Enakku Vazhiyaam

*–மே.வீ.வேணுகோபால்*
*(Me. Vi. Venugopal)*

---

# பச்சை கிளி பாடும்
# Pachchai Kili Paadum

பச்சை கிளி பாடும்
Pachchai Kili Paadum

பறந்து பறந்து ஓடும்!
Paranthu Paranthu Oodum

உச்சிக் கிளையில் ஆடும்
Uchchi Kilaiyil Aadum

உலுக்கி உலுக்கி ஆடும்!
Ulukki Ulukki Aadum!

குண்டு மாம்பழம் தேடும்
Gundu Maambazham Thedum

கூண்டில் அடைத்தால் வாடும்!
Koondil Adaiththaal Vaadum!

*–புலவர் இளஞ்செழியன்*
*(Pulavar Elanchezhiyan)*

---

## மரம் வளர்போம்
## Maram Valarpoom

பூவே பூவே காய் தருவாய்
Poove Poove Kaai Tharuvaai

காயே காயே கனி தருவாய்
Kaaye Kaaye Kani Tharuvaai

கனியே கனியே விதை தருவாய்
Kaniye Kaniye Vidai Tharuvaai

விதையே விதையே செடி தருவாய்
Vidaiye Vidaiye Sedi Tharuvaai

செடியே செடியே மரம் தருவாய்
Sediye Sediye Maram Tharuvaai

மரமே மரமே மழை தருவாய்
Marame Marame Mazhai Tharuvaai

மரத்தை வளர்போம் மழை பெறுவோம்
Maraththai Valarpom Mazhai Peruvom

மகிழ்ச்சியோடு வாழ்ந்திடுவோம்
Magizhchchiyodu Vaazhnthiduvom

*–கவிஞர் மு.செகசோதி*
*(Kavingnyar Mu. Jegajothi)*

---

## யானை
## Yaanai

யானை பெரிய யானை!
Yaanai periya yaanai!

யார்க்கும் அஞ்சா யானை!
Yaarukum anjaa yaanai!

பானை வயிற்று யானை!
Paanai vayiru yaanai!

பல்லைக் காட்டா யானை!
Pallai kaatta yaanai!

முறத்தைப் போலக் காது!
Murathai pola kaathu!

முன்னால் வீசும் யானை!
Munaal veesum yaanai!

சிறிய கோலிக் குண்டாம்!
Siriya goli gundaam!

சின்னக் கண்கள் யானை!
Chinna kangal yaanai!

முன்னங் காலை மடக்கி
Munnang kaalai madakki

முட்டி போட்டுப் படுக்கும்!
Mutti pottu padukkum!

சின்னக் குழந்தை ஏற்றிச்
Chinna kuzhanthai eri

சிங்காரமாய் நடக்கும்!
Singaaramai nadakkum!

*–கவிஞர் கண்மதியன்*
*(Kavingynar Kannmathiyan)*

---

## தொடர் வண்டி
## Thodar Vanndi

நீண்ட வண்டி தொடர் வண்டி
Neenda vanndi thodar vanndi

நீண்ட தொலைவு போகும் வண்டி
Neenda tholaivu pogum vanndi

தண்ட வாளத்தில் அது போகும்
Thanda vaallithil athu pogum

தடதட வென்றே விரைந் தோடும்.
Thada thada venru virainthodum

கூவென ஒலிப்பது புகை வண்டி
Koovena olippadu pugai vanndi

பூம் என ஒலிப்பது மின் வண்டி
Paam ena olippadu min vanndi

பச்சை சிவப்புக் கொடி இரண்டை

Pachai sivappu kodi errandai

நிலையத் தலைவர் காட்டிடுவார்
Nilaya thalaivar kaatiduvaar

சிவப்பைக் காட்டினால் நின்று விடும்
Sivappai kaatinaal nindru vidum

பச்சையைக் காட்டினால் பாய்ந் தோடும்
Pachaiyai kaatinaal paaynthodum

*–கவிஞர் இளவழகன்*
*(Kavingynar Elavazhagan)*

---

## எங்கள் அம்மா
## Engal Amma

எங்கள் அம்மா இனியவள்
Engal Amma iniyavall

என்றும் அன்பு தருபவள்
Endrum anbu tharubavall

தங்கக் குணம் கொண்டவள்
Thanga gunam kondavall

தயக்கம் இன்றிச் சொல்லுவேன்!
Thayakkam inri solluven!

பஞ்சு போலத் தூயதாய்
Panju pola thooya thai

பண்பு நலம் கொண்டவள்
Pannbu nalam kondavall

கொஞ்சிக் கொஞ்சிப் பேசியே
Konji konji pesiye

குழந்தை எம்மைப் பேணுவாள்!
Kuzhanthai emmai penuvaall!

பண்டம் பலவும் ஆக்கியே
Pandam palavum aakiye

பங்கு வைத்துத் தருபவள்
Pangu vaithu tharubavall

கண்ட தில்லை அவளைப் போல்
Kandathillai avallai pol

கனிவு மிக்க கடவுளை!

Kanivu mikka kadavulai!

பந்து கோலி பம்பரம்
Pandu goli pambaram

பாண்டிஆட்டம் ஆடிட
Paandi aattam aadida

எந்த நேரம் சரியென
Entha neram sariyena

எமக்குச் சொல்லித் தருபவள்!
Emakku solli tharubavall!

தம்பி தங்கை இருவரும்
Thambi thangai eruvarum

தாய்க்குத் தருவர் தொல்லையே
Thaaikku tharuvar thollaiye

வம்பு செய்த போதிலும்
Vambu seitha pothilum

வாரி அணைத்து மகிழ்வளே!
Vaari anaithu magizhvalle!

என்றும் வாழ்வில் உயரவே
Enrum vaazhvil uyarave

இனிய நெறிகள் காட்டுவாள்
Iniya nerigall kaatuvaall

நன்று தீது எவையென
Nanru theethu evaiyena

நாளும் எமக்கு ஊட்டுவாள்!
Naallum emakku ootuvaall!

*–இ. கோமதிநாயகம்*
*(E. Gomathinayagam)*

---

# பட்டாம் பூச்சி
# Pattam Poochi

பட்டாம் பூச்சிச் சிறகு
Pattam poochi siragu

பார்க்கப் பார்க்க அழகு!
Paarka paarka azhagu!

எட்டி எட்டிப் பாரு!

Etti etti paaru!

என்ன என்ன அழகு!
Enna enna azhagu!

குந்திக் குந்திப் பறந்து
Kundi kundi paranthu

குவிந்த சிறகை விரித்து
Kuvinda siragai virithu

நந்தம் மனத்தைக் கவர்ந்து
Nandam manathai kavarnthu

நன்றாய்ப் பறத்தல் பாரு!
Nanraai paratthal paaru!

விட்டு விட்டு மின்ன
Vittu vittu minna

வெயிலில் பறந்து செல்லும்
Veiyillil paranthu sellum

பட்டாம் பூச்சி பாரு!
Pattam poochi paaru!

பார்க்கப் பார்க்க அழகு!
Paarka paarka azhagu!

*–கவிஞர் அ. கி. பரந்தாமனார்*
*(Kavingynar A. Ki. Parandaamanaar)*

---

# ஓடி விளையாடு பாப்பா
# Oodi Villaiyaadu Paapa

ஓடி விளையாடு பாப்பா – நீ
Odi villaiyaadu paapa – nee

ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
Ooynthirukka laakaathu papa

கூடி விளையாடு பாப்பா – ஒரு
Koodi villaiyaadu paapa – oru

குழந்தையை வையாதே பாப்பா!
Kuzhanthaiyai vaiyade papa

சின்னஞ்சிறு குருவி போலே – நீ
Chinnanchiru kuruvi poole – nee

திரிந்து பறந்து வா பாப்பா!

Thirinthu paranthu vaa papa

வண்ணப் பறவைகளைக் கண்டு – நீ
Vanna paravaikalai kanndu – nee

மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!
Manathil magizhchi kollu paapa

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
Kaalai ezhanthavudan padippu – pinbu

கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
Kanivu kodukkum nalla paattu

மாலை முழுதும் விளையாட்டு – என்று
Maalai muzhuthum villaiyaatu – enru

வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!
Vazhakka paduththi kollu paapa

*–மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்*
*(Mahaakavi C. Subramania Bharathiaar)*

---

## சாலை விதிகள்
## Saalai Vithigal

பள்ளி செல்லும் பிள்ளையே
Palli sellum pillaiye

பாடம் ஒன்று கற்றுக் கொள்
Paadam onru karru kol

நல்ல சாலை விதிகளை
Nalla saalai vithigalai

நன்கு மனத்துள் வைத்துக் கொள்
Nangu manathul vaithu kol

நடக்கும் பாதை வழியிலே
Nadakkum paathai vazhiyile

நானும் நீயும் நடக்கணும்
Naanum neeyum nadakkanum

கடக்கும் இடத்தில் கவனமாய்க்
Kadakkum idathil kavanamaai

கடந்து போக தெரியணும்
Kadanthu poga theriyanum

சிரித்துப் பேசி மகிழ்ச்சியாய்
Sirithu peesi magizhchiyaai

சேர்ந்து நால்வர் சாலையை
Seernthu naalvar saalaiyai

மறித்துச் செல்லல் நல்லதோ
Mariththu sellal nallatho

மனத்தில் எண்ணிப் பாருங்கள்
Manaththil enni paarungall

வளைவில் பிறரை முந்தினால்
Vallaivil pirarai munthinaal

வந்து நிற்கும் விபத்துமே
Vanthu nirkkum vibaththume

அளவில்லாத வேகத்தால்
Alavillatha vekaththal

ஆபத்துண்டு தெரிந்து கொள்
Aabathundu therinthu koll

அதிக வீர சாகசம்
Athiga veera saagasam

ஆகா தென்றும் சாலையில்
Aagathendrum saalaiyil

மதித்து விதியைப் போற்றினால்
Madiththu vithiyai potrinaal

மகிழ்ச்சியாக வாழலாம்
Magizhchiyaaga vaazhalaam

*–கவிஞர் மா. பெரியசாமி.*
*(Kavingynar Maa. Periyasaami)*

---

## வானம் கறுத்தால் மழை பெய்யும்
## Vaanam Karuththal Mazhai Peiyum

வானம் கறுத்தால் மழை பெய்யும்
Vaanam karuththaal mazhai peiyum

மழை பெய்தால் மண் குளிரும்
Mazhai peithaal mann kulirum

மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்
Mann kulirnthaal pul thazaikkum

புல் தழைத்தால் பசு மேயும்

Pul thazhaiththaal pasu meeyum

பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
Pasu meinthaal paal surakkum

பால் சுரந்தால் கன்று குடிக்கும்
Paal suranthaal kandru kudikkum

கன்று குடித்து மிஞ்சியதைக்
Kandru kudithu minjiyathai

கறந்து கொண்டு வந்திடலாம்
Karanthu kondu vanthidalaam

காய்ச்சி நாமும் குடித்திடலாம்
Kaaychi namum kudithidalaam

*–கவிமணி. தேசிகவிநாயகம்பிள்ளை*
*(Kavimani DesikavinaayakamPillai)*

---

## சொல் ஒன்று பொருள் இரண்டு
## Sol Ondru Porul Erandu

மாலை மாலை மாலை மாலை
Maalai maalai maalai maalai

மலர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் மாலை
Malargal ondraai seernthaal maalai

மகிழ்வாய் ஆடும் நேரம் மாலை
Magizhvaai aadum neram maalai

ஆடு ஆடு ஆடு ஆடு
Aadu aadu aadu aadu

அழகுத் தமிழில் பாடி ஆடு
Azhagu thamizhil paadi aadu

அங்கே புல்லை மேய்வது ஆடு
Ange pullai meeyvathu aadu

ஆறு ஆறு ஆறு ஆறு
Aaru aaru aaru aaru

அழகாய் தண்ணீர் ஓடிடும் ஆறு
Azhagaai thanneer oodidum aaru

அன்பு தோழி வயது ஆறு
Anbu thozhi vayathu aaru

நாடு நாடு நாடு நாடு
Naadu naadu naadu naadu

நல்ல நண்பன் நட்பை நாடு
Nalla nannban natpai naadu

நமது நாடு பாரத நாடு
Namathu naadu bharatha naadu

*–அங்கமங்கலம் குப்பு*
*(Angamangalam Kuppu)*

---

## டம் டம்... டும் டும்... கச்சேரி
## Dam Dam... Dum Dum... Kacheri

காக்கா அந்தப்பக்கம் கா, கா, கா...
Kaakkaa anthapakkam kaa, kaa, kaa...

கிளி இந்தப்பக்கம் கீ, கீ, கீ...
Kili inthapakkam kii, kii, kii...

குயில் மரத்தில கூ, கூ, கூ...
Kuyil marathila koo, koo, koo...

கோழி கூரையில கொக், கொக், கொக்...
Kozhi kooraiyila kok, kok, kok...

பசுவும் கன்றும் மா, மா, மா...
Pasuvum kandrum maa, maa, maa...

பதுங்கும் பூனை மியாவ், மியாவ், மியாவ்...
Padungum poonai miyaav, miyaav, miyaav...

மேயும் ஆடு மே, மே, மே...
Meyum aadu me, me, me...

காக்கும் நாய் லொள், லொள், லொள்...
Kaakum nai lol, lol, lol...

டம் டம்... டும் டும்... கச்சேரி
Dam Dam... Dum Dum... Kacheri

நடக்குது பாரு ஊருக்குள்ளே.
Nadakuthu paaru urukkulle.

---

## நத்தையம்மா
## Nathaiyamma

நத்தையம்மா, நத்தையம்மா,
Nathaiyamma, Nathaiyamma,

எங்கே போகிறாய்?

Enge Pogiraai?

அத்தை குளிக்கத் தண்ணீர் குடம்
Athai kulikka thaneer kudam

கொண்டு போகிறேன்.
Kondu pogiren.

எத்தனைநாள் ஆகும் அத்தை
Ethannai naal aagum athai

வீடு செல்லவே?
Veedu sellave?

பத்தே நாள் தான்; வேணு மானால்
Pathe naal thaan; Venu manaal

பார்த்துக் கொண்டிரு.
Paarthu kondiru.

*-அழ. வள்ளியப்பா*
*(Azha. Valliyappa)*

---

# என் பந்து
# En Panthu

சின்ன சின்ன பந்து
Chinna Chinna Panthu

சிறுமி ஆடும் பந்து
Sirumi Aadum panthu

வண்ண வண்ணப் பந்து
Vanna Vanna Panthu

வானில் பாயும் பந்து
Vaanil paayum panthu

குட்டிக் கையால் தட்டினால்
Kutti kaiyaal thatinaal

குதித்து ஓடும் பந்து
Kuthithu Oodum Panthu

எட்டி ஓங்கி உதைத்தால்
Etti Ongi Uthaithaal

எங்கோ போகும் பந்து!
Engo Pogum Panthu!

---

## செல்லக் குட்டி
## Chella kutti

சின்னச் சின்ன நாய்க்குட்டி
Chinna Chinna Naaikutti

செல்லமான நாய்க்குட்டி
Chellamaana Naaikutti

பள்ளிக்கூடம் விட்டு வந்தால்
Pallikoodam Vittu Vanthaal

பாய்ந்து வரும் நாய்க்குட்டி
Paaynthu Varum Naaikutti

கொஞ்சம் நானும் பக்கம் வந்தால்
Konjam Naanum Pakkam Vanthaal

கொஞ்சி வரும் நாய்குட்டி
Konji Varum Naaikutti

எட்டாத் தூரம் செல்லும் பந்தை
Etta Dooram Sellum Panthai

எடுத்து வரும் நாய்க்குட்டி.
Eduthu Varum Naaikutti.

---

## காய்! காய்! காய்!
## Kaai! Kaai! Kaai!

இவ்வளவு வேணுமா பாகற்காய்?
Evallavu Vennumaa Paagarkai?

அத்துடன் வேணும் பீர்க்கங்காய்!
Athudan Vennum Peerkangai!

இவ்வளவு வேணுமா பீர்க்கங்காய்?
Evallavu Vennumaa Peerkangai?

அத்துடன் வேணும் கத்தரிக்காய்!
Athudan Vennum Katharikkai!

இவ்வளவு வேணுமா கத்தரிக்காய்?
Evallavu Vennumaa Katharikkai?

அத்துடன் வேணும் வாழைக்காய்!
Athudan Vennum Vaazhaikkai!
இவ்வளவு வேணுமா வாழைக்காய்?
Evallavu Vennumaa Vazhaikkai?

அத்துடன் வேணும் முருங்கைக்காய்!
Athudan Vennum Murungaikkai!

இவ்வளவு வேணுமா முருங்கைக்காய்?
Evallavu Vennumaa Murungaikkai?

அத்துடன் வேணும் சுண்டைக்காய்!
Athudan Vennum Sundaikkai!

இன்னும் வேணுமா உனக்கு?
Ennum Vennumaa Unakku?

எல்லாம் வேணுமே எனக்கு!
Ellam Vennume Enakku!

---

## வண்ண வண்ணப் பூக்கள்
## Vanna Vanna Pookal

மல்லிகைப்பூவே! மல்லிகைப்பூவே!
Malligaipoove! Malligaipoove!

எங்கே போறீங்க?
Enge Poringa?

மஞ்சள் சாமந்தி பூத்துச்சான்னு
Manjal saamandi poothuchchanu

பார்க்க போறேங்க!
Paarka Porenga!

சாமந்திப்பூவே! சாமந்திப்பூவே!
Saamandi Poove! Saamandi Poove!

எங்க போறீங்க?
Enge Poringa?

வெள்ளைத் தாமரை பூத்துச்சான்னு
Vellai Thaamarai poothuchchanu

பார்க்க போறேங்க!
Paarka Porenga!

தாமரைப்பூவே! தாமரைப்பூவே!
Thaamarai Poove! Thaamarai Poove!

எங்க போறீங்க?
Enge Poringa?

சிவப்பு ரோஜா பூத்துச்சான்னு
Sivappu Roja poothuchchanu

பார்க்க போறேங்க!
Paarka Porenga!

ரோஜாப்பூவே! ரோஜாப்பூவே!
Roja Poove! Roja Poove!

எங்க போறீங்க?
Enge Poringa?

பூத்தபூவைப் பறிச்சி
Poothapoovai parichi

உனக்குச் சூட்டப் போறேங்க!
Unakku Sootta Porenga!

---

## வா, மழையே, வா
## Vaa, Mazhaiye, Vaa

கத்தி கப்பல் செய்து வைத்தேன்.
Kaththi Kappal Seithu Vaithen.

கால்வாய் கூடத் தோண்டி வைத்தேன்.
Kaalvaai Kooda Thondi Vaithen.

வா, மழையே, வா.
Vaa, Mazhaiye, Vaa.

வா, மழையே, வா.
Vaa, Mazhaiye, Vaa.

சின்ன செடியை நட்டு வைத்தேன்.
Chinna Sediyai Nattu Vaithen.

செப்புக் குடத்தை எடுத்து வைத்தேன்.
Seppu Kudaththai Eduthu Vaithen.

வா, மழையே, வா.
Vaa, Mazhaiye, Vaa.

வா, மழையே, வா.
Vaa, Mazhaiye, Vaa.

வீதிப் பக்கம் வந்து நின்றேன்.
Veethi Pakkam Vanthu Ninren.

மேலே மேலே பார்த்து நின்றேன்.
Mele Mele Paarththu Ninren.

வா, மழையே, வா.
Vaa, Mazhaiye, Vaa.

வா, மழையே, வா.
Vaa, Mazhaiye, Vaa.

---

## சொல்லுங்க! சொல்லுங்க! சொல்லுங்க!
## Sollunga! Sollunga! Sollunga!

சொல்லுங்க! சொல்லுங்க! சொல்லுங்க!
Sollunga! Sollunga! Sollunga!

சித்திரை, வைகாசி, ஆனி
Chiththirai, Vaigasi, Aani

சொல்லுங்க! சொல்லுங்க! சொல்லுங்க!
Sollunga! Sollunga! Sollunga!

அடுத்து வருவதைச் சொல்லுங்க!
Aduththu Varuvathai Sollunga!

ஆடி, ஆவணி, புரட்டாசி,
Aadi, Aavani, Purattasi,

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி
Aippasi, Kaarthigai, Maargazhi

தை, மாசி, பங்குனி,
Thai, Maasi, Panguni,

அப்படி நீங்களும் சொல்லுங்க!
Appadi Neengalum Sollunga!

ஆடிப் பாடிச் சொல்லுங்க!
Aadi Paadi Sollunga!

---

## ஆறு சுவைகள்
## Aaru Suvaikal

இனிக்கும் இனிக்கும்
Enikkum Enikkum

கரும்பு இனிக்கும்.
Karumbu Enikkum.

கசக்கும் கசக்கும்
Kasakkum Kasakkum

பாகற்காய் கசக்கும்.
Paagarkkai Kasakkum.

புளிக்கும் புளிக்கும்
Pulikkum Pulikkum

புளியம்பழம் புளிக்கும்.
Puliyam Pazham Pulikkum.

உவர்க்கும் உவர்க்கும்
Uvarkkum Uvarkkum

உப்பு உவர்க்கும்.
Uppu Uvarkkum.

துவர்க்கும் துவர்க்கும்
Thuvarkkum Thuvarkkum

பாக்கு துவர்க்கும்.
Pakku Thuvarkkum.

காரும் காரும்
Kaarum Kaarum

மிளகாய் காரும்.
Milagai Kaarum.

---

## தம்பி! தம்பி!
## Thambi! Thambi!

தம்பி….. தம்பி…..
Thambi….. Thambi…..

என்ன வேண்டும்?
Enna Vendum?

பழம் வேண்டும்.
Pazham Vendum.

என்ன பழம்?
Enna Pazham?

பலாபழம்.
Palapazham.

என்ன பலா?
Enna Pala?

வேர்ப் பலா.
Verp Pala.

| | |
|---|---|
| என்ன வேர்? Enna Ver? | வெட்டி வேர். Vetti Ver. |
| என்ன வெட்டி? Enna Vetti? | விறகு வெட்டி. Viragu Vetti. |
| என்ன விறகு? Enna Viragu | மர விறகு. Mara Viragu. |
| என்ன மரம்? Enna Maram? | பனை மரம். Panai Maram. |
| என்ன பனை? Enna Panai? | தாளிப்பனை. Thalippanai. |
| என்ன தாளி? Enna Thali? | விருந்தாளி. Virunthali. |
| என்ன விருந்து? Enna Virunthu? | மண விருந்து. Mana Virunthu. |
| என்ன மணம்? Enna Manam? | பூ மணம். Poo Manam. |
| என்ன பூ? Enna Poo? | மாம்பூ Maampoo. |
| என்ன மா? Enna Maa? | அம்மா! Amma! |

---

## ஒன்று இரண்டு மூன்று …
## Ondru Irandu Moondru …

ஒன்று என்று சொல்லுவோம்
ஒன்றாய்க் கூடி வாழ்ந்திடுவோம்
Ondru endru cholluvoom
Ondraik kuudi vazhnthiduvoom

இரண்டு என்று சொல்லுவோம்
இரண்டு கையால் வணங்கிடுவோம்
Erandu endru cholluvoom
Erandu kaiyaal vanaghiduvoom

மூன்று என்று சொல்லுவோம்
முயற்சி செய்து வென்றிடுவோம்

Moondru endru cholluvoom
Murarchi seithu vendriduvoom

நான்கு என்று சொல்லுவோம்
நன்மைகள் பலவும் செய்திடுவோம்
Naangu endru cholluvoom
Nanmaigal palavum seithiduvoom

ஐந்து என்று சொல்லுவோம்
ஐக்கியமாய் பழகிடுவோம்
Inthu endru cholluvoom
Ikkiyamaai paghzagiduvoom

ஆறு என்று சொல்லுவோம்
ஆர்வமாய் இருந்திடுவோம்
Aaru endru cholluvoom
Aarvamai irunthiduvoom

ஏழு என்று சொல்லுவோம்
ஏழ்மையை விரட்டிடுவோம்
Ezhu endru cholluvoom
Ezhmaiyai virattiduvoom

எட்டு என்று சொல்லுவோம்
விட்டுக்கொடுத்து வாழ்திடுவோம்
Ettu endru cholluvoom
Vittukkoduththu vazhnthiduvoom

ஒன்பது என்று சொல்லுவோம்
ஓய்வின்றி உழைத்திடுவோம்
Onpathu endru cholluvoom
Ooyvindri uzhaththiduvoom

பத்து என்று சொல்லுவோம்
பாசமாய் நடந்திடுவோம்
Paththu endru cholluvoom
Paasamai nadanthiduvoom

---

## தோசை அம்மா தோசை
## Thosai Amma Thosai

தோசை அம்மா தோசை
அம்மா சுட்ட தோசை
Thosai amma thosai
Amma sutta thosai

அரிசி மாவும் உளுந்து மாவும்
கலந்து சுட்ட தோசை
Arisi maavum ulunthu maavum
Kalanthu sutta thosai

அப்பாவுக்கு நாலு
அம்மாவுக்கு மூன்று
Appavukku naalu
Ammavukku moondru

அண்ணாவுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்று
Annavukku irandu
Pappavukku ondru

தின்ன தின்ன ஆசை
திருப்பிக் கேட்டால் பூசை
Thinna thinna aasai
Thiruppik kettal poosai

---

## யானையாரே யானையாரே
## Yanaiyaare Yanaiyaare

யானையாரே யானையாரே
எங்கே போறீங்க
Yanaiyaare yanaiyaare
Enge pooreenga

வீர நடை போட்டு
எங்கே போறீங்க
Veera nadai poottu
Enge pooreenga

விருந்தாளியாய் எங்களோட
வீட்டுக்கு வாங்க
Virunthaliyay engaloda
Veettukku vaanga

வெல்லம் தரோம் தேங்காய் தரோம்
தின்று பாருங்க
Vellam tharom thengai tharom
Thindru paarunga

விருந்தாளியை மதிக்கிறது
எங்கள் பண்புங்க

Virunthaliyai mathikkirathu
Engal panpunga

உட்கார்த்தி வச்சு விருந்து தரது
எங்கள் மரபுங்க
Utkaarthi vaichu unavu tharathu
Engal marabunga

ஆனால், நாற்காலியில் அமரவேண்டாம்
பாரம் தாங்காது
Aanaal naarkaliyil amaravendam
Bharam thangathu

---

## குள்ள குள்ள வாத்து
## Kulla Kulla Vaaththu

குள்ள குள்ள வாத்து
குவா குவா வாத்து
Kulla kulla vaaththu
Kuvaa kuvaa vaaththu

மெல்ல உடலை சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
Mella udalai chaiththu
Melum keezhum paarththu

மெல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து
Mellamaga nadakkum
Chinna mani vaaththu

தண்ணீரில் நன்றாய்
நீந்தி வரும் வாத்து
Thanneeril nandraay
Neenthi varum vaaththu

---

## சலவைக்காரர்
## Salavaikkaarar

சலவைக்காரர் வந்தார் வந்தார்
எத்தனை துணிகள் தந்தார் தந்தார்
Salavaikkarar vanthaar vanthaar
Eththanai thunigal thanthaar thanthaar

ஒன்று இரண்டு மூன்று

Ondru irandu moondru

சலவைக்காரர் வந்தார் வந்தார்
எத்தனை துணிகள் தந்தார் தந்தார்
Salavaikkarar vanthaar vanthaar
Eththanai thunigal thanthaar thanthaar

நான்கு ஐந்து ஆறு
Naangu inthu aaru

சலவைக்காரர் வந்தார் வந்தார்
எத்தனை துணிகள் தந்தார் தந்தார்
Salavaikkarar vanthaar vanthaar
Eththanai thunigal thanthaar thanthaar

ஏழு எட்டு ஒன்பது
Ezhu ettu onpathu

சலவைக்காரர் வந்தார் வந்தார்
எத்தனை துணிகள் தந்தார் தந்தார்
Salavaikkarar vanthaar vanthaar
Eththanai thunigal thanthaar thanthaar
பத்து பத்து பத்து
Paththu paththu paththu

---

## சின்ன சின்ன மோட்டார்
## Chinna Chinna Motor

சின்ன சின்ன மோட்டார்
சிங்கார மோட்டார்
Chinna chinna motor
Singara motor

நாலு சக்கர மோட்டார்
நாங்கள் ஏறும் மோட்டார்
Naalu chakkara motor
Naangal erum motor

பாம் பாம் மோட்டார்
பாய்ந்து செல்லும் மோட்டார்
Pom pom motor
Paaynthu chellum motor

---

## எங்கள் வீட்டுப் பூனை
## Engal Veettup Poonai

எங்கள் வீட்டுப் பூனை
இருட்டில் எட்டி உருட்டும்
Engal veettu poonai
Eruttil etti uruttum

அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
Angum ingum thedum
Aalaikkandal oodum

தயிரை ஏறிக் குடிக்கும்
நாற்காலியின் கீழ் படுக்கும்
Thayirai eerik kudikkum
Naarkaaliyin keezh padukkum

தாவி எலியைப் பிடிக்கும்
மியாவ் மியாவ் என்று கத்தும்
Thaavi eliyai pidikkum
Miyaav miyaav endru kaththum

வெள்ளை நிற பூனை
Vellai nira poonai
எங்கள் வீட்டுப் பூனை
Engal Veetu Poonai

---

## மழையே மழையே
## Mazhaye Mazhaye

மழையே மழையே போய்விடு
Mazhaye mazhaye pooividu

மற்றொரு நாள் வந்திடு
Matroru naal vanthidu

விளையாடத்தான் எனக்கு ஆசை
Vilaiyadaththaan enakku aasai

இன்னொரு நாள் பொழிந்திடு
Ennoru naal pozhinthidu

---

## புத்தி உள்ள காக்கை
## Puththi Ulla Kaakkai

தாகம் உள்ள காக்கை ஒன்று சுற்றி சுற்றி வந்தது
குடிக்க தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டது
Thagam ulla kaakkai ondru suttri suttri vanthathu
Kudikka thanneer kidaikkamal migavum kashtappattathu

கிணறு ஒன்றை கண்டது
அருகில் ஒரு ஜாடியும் இருந்தது
Kinaru ondrai kandathu
Arugil oru jaadiyum irunthathu

ஜாடியின் மீது அமர்ந்தது
எட்டி எட்டி பார்த்தது
Jaadiyin meethu amarnthathu
Etti etti paarththathu

அடியில் தண்ணீர் இருந்தது
ஆனால் அதற்கு எட்டவில்லை
Adiyil thanneer irunthathu
Aanaal athrkku ettavillai

என்ன செய்தது? அது என்ன செய்தது?
கீழே கிடந்த கற்களை ஜாடியில் எடுத்து போட்டது
Enna seithathu? Athu enna seithathu?
Keezhe kidantha karkkalai jaadiyil eduththu poottathu

தண்ணீர் மேலே வந்தது
தாகம் தீரக் குடித்தது
Thanneer meele vanthathu
Thaagam theera kudiththathu

சந்தோஷமாய்ப் பறந்தது
காக்கை போல நாமுமே முயற்சி செய்ய வேண்டுமே
Santhoshamaai paranthathu
Kaakai poola naamume muyarchi cheyya veendume

---

## அத்தனை பேரும் அம்மா என்று அழைப்பார்
## Aththanai Perum Amma Endru Azhaippaar

அன்பின் உருவமாம் அதை அம்மா என்று அழைப்பார்
Anbin uruvamaam athai amma endru ahzaippaar

அன்புள்ள எவரையும் அம்மா என்று அழைப்பார்
Anbulla evaraiyum amma endru azhaippaar

கொஞ்சிடும் குழந்தையை அம்மா என்று அழைப்பார்

Konjidum kuzhandaiyai amma endru azhaippaar

கன்னிப் பெண்ணையும் அம்மா என்று அழைப்பார்
Kannip pennaiyum amma endru azhaippaar

காதலன் காதலியை அம்மா என்று அழைப்பார்
Kaathalan kaathaliyai amma endru azhaippaar

கணவன் மனைவியை அம்மா என்று அழைப்பார்
Kanavan manaiviyai amma endru azhaippaar

கண்கண்ட அம்மனைஅம்மா என்று அழைப்பார்
Kankanda ammanai amma endru azhaippaar

பசியில் வாடுபவர் அம்மா என்று சொல்லுவார்
Pasiyil vaadupavar amma endru cholluvaar

வெற்றியிலும் தோல்வியிலும் அம்மா என்று சொல்லுவார்
Vertyilum tholviyilum amma endru cholluvaar

வலியில் துடிப்பவரும் அம்மா என்று சொல்லுவார்
Valiyil thudippavarum amma endru cholluvaar

பிச்சை எடுப்பவரும் அம்மா என்று சொல்லுவார்
Pichchai eduppavarum amma endru cholluvaar

பச்சிளங் குழந்தை அம்மா என்று சொல்லும்
Pachilam kuzhandai amma endru chollum

பசுவின் மொழியிலும் அம்மா என்ற சொல்தான்
Pasuvin mozhiyilum amma endra sol thaan

அம்மா என்ற சொல்லுக்கு எத்தனை அர்த்தம்
Amma endra sollukku eththanai artham

அகில உலகுக்கும் அவள்தானே தெய்வம்
Agila ulagukkum avalthaane deivam

அந்த அன்னையின் தினத்தை அன்போடு நாமும்
Antha annaiyin thinaththai anbodu naamum

கொண்டாடி மகிழ்வோம் ஆசையாக இன்று
Kondadi magizhvoom aasaiyaga endru

---

## அப்பா தந்த மோட்டார்கள்

# Appa thantha motorgal

சின்னச் சின்ன மோட்டார்கள்
Chinnach chinna motorgal

சாரி சாரியாய்ச் செல்லுமாம்
Saari saariyaaich chellumaam

சிகப்பு நிற மோட்டார்கள்
Sigappu nira motorgal

சீரிச் சீரிச் செல்லுமாம்
Seerich seerich chellumaam

வீதி முழுதும் மோட்டார்கள்
Veethi muzhuthum motorgal

வித விதமான மோட்டார்கள்
Vitha vithamaana motorgal

வண்ண வண்ண மோட்டார்கள்
Vanna vanna motorgal

அண்ணாவுக்கு ஐந்து மோட்டாரும்
Annavukku iinthu motorum

தம்பிக்கு ஒரு மோட்டாரும்
Thambikku oru motorum

அப்பா வாங்கித் தந்தாரே
Appa vaangith thanthare

அப்பா தந்த மோட்டார்கள்
Appa thantha motorgal

தெருவில் மட்டும் ஓடாது
Theruvil mattum oodathu

குட்டிக் குட்டி மோட்டார்கள்
Kuttyk kutty motorgal

காஸ் இல்லாமல் ஓடுமே
Gas illamal oodume

---

# லட்டும் தட்டும்

# Laddum Thattum

வட்டமான தட்டு
Vattamaan thattu

தட்டு நிறைய லட்டு
Thattu niraiya laddu

லட்டு மொத்தம் எட்டு
Laddu moththam ettu

எட்டில் பாதி விட்டு
Ettil pathi vittu

எடுத்தான் மீதம் கிட்டு
Eduththaan meetham kittu

மீதம் உள்ள லட்டு
Meethan ulla laddu

முழுதும் தங்கை பட்டு
Muzhuthum thangai pattu

போட்டாள் வாயில் பிட்டு
Pottal vaayil pittu

கிட்டு நான்கு லட்டு
Kittu naangu laddu

பட்டு நான்கு லட்டு
Pattu naangu laddu

மொத்தம் தீர்ந்த தெட்டு
Moththam theerntha thettu

மீதம் காலித் தட்டு
Meetham kaali thattu

---

# மாம்பழம்
# Mambhazham

மாம்பழம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
Mambhazham mambhazham

Malgova mambhazham

சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
Selaththu mambhazham
Thiththikkum mambhazham

அழகான மாம்பழம்
தங்க நிற மாம்பழம்
Azhagana mambhazham
Thanga nira mambhazham

உங்களுக்கு வேணுமா?
இங்கு ஓடி வாருங்கள்
Ungalukku venuma?
Ingu oodi vaarungal

தம்பி தங்கை இருவரும்
பங்கு போட்டுத் தின்னலாம்
Thambi thangai iruvarum
Pangu pottuth thinnalaam

---

## கிழமைப் பாட்டு
## Kizhamaip Paattu

ஞாயிற்றுக் கிழமை நகையைக் காணோம்
Gnayirttuk kizhamai nagaiyai kaanoom

திங்கட் கிழமை திருடன் கிடைத்தான்
Thingat kizhamai thirudan kidaiththaan

செவ்வாய்க் கிழமை ஜெயிலுக்குப் போனான்
Sevvaik kizhamai jayilukkup poonaan

புதன் கிழமை புத்தி வந்தது
Puthan kizhamai puththi vanthathu

வியாழக் கிழமை விடுதலை ஆனான்
Viyaayzhak kizhamai viduthalai aanaan

வெள்ளிக் கிழமை வீட்டுக்குப் போனான்
Vellik kizhamai veettukkup poonaan

சனிக்கிழமை சாப்பிட்டுப் படுத்தான்
Sanik kizhamai saappittup paduththaan

அப்புறம் அவன் கதை யாருக்குத் தெரியும்
Appuram avan kathai yaarukkuth theriyum

---

## வெள்ளை முயல்
## Vellai Muyal

வெள்ளை முயல் ஓடுது
Vellai muyal ooduthu

வேகமாக ஓடுது
Vegamaga ooduthu

குள்ள முயல் ஓடுது
Kulla muyal ooduthu

குதித்துக் குதித்து ஓடுது
Kuthiththuk kuthiththu ooduthu

நெட்டையான காதையே
Nettaiyaana kaathiye

நீட்டி நீட்டி ஆட்டுது
Neetti neetti aattuthu

குட்டையான வாலையே
Kuttaiyaana vaalaiye

குறு குறு வென்று ஆட்டுது
Kuru kuru vendru aattuthu

---

## தோதோ நாய்க்குட்டி
## Thotho Naaaikkutty

தோதோ நாய்க்குட்டி
Thotho naaikkutty
துள்ளி வா வா நாய்க்குட்டி
Thulli vaa vaa naaikkutty

லோள் லொள் நாய்க்குட்டி
வாலை ஆட்டும் நாய்க்குட்டி
Lol lol naaikkutty
Vaalai aattum naaikkutty

எங்கள் வீட்டு நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
Engal veettu naaikkutty
Nandri yulla naaikkutty

கண்ணைப் போல வீட்டையே
காக்கும் எங்கள் நாய்க்குட்டி
Kannaip poola veettaiye
Kakkum engal naaikkutty

---

# செய்தித்தாள்
# Seithiththaal

தினமும் புதிய செய்திகளை
எப்பவும் தருமே செய்தித்தாள்
Thinamum puthiya seithigalai
Eppavum tharume seithiththaal

விதவிதமான செய்திகளால்
அறிவைப் பெருக்கும் செய்தித்தாள்
Vithavithamaana seithigalal
Arivaip perukkum seithiththaal

காலையில் வந்ததும் அதைப் படிக்க
எல்லோரும் விரைந்து ஓடுவரே
Kaalaiyil vanthathum athaip padikka
Ellorum virainthu ooduvare

அடுப்பில் பாலை மறந்துவிட்டு
அம்மாவும் அங்கே வந்திடுவாள்
Aduppil paalai maranthuvittu
Ammavum ange vanthiduvaal

அப்புறம் தம்பியும் அக்காவும்
ஆளுக்கொருபுறம் இழுப்பார்கள்
Appuram thambiyum akkavum
Aaluk orupuram izhuppargal

எல்லோரும் போனதும் குட்டிப்பையன்
அதில், கப்பல் செய்து மிதக்க வைப்பான்
Ellrorum ponathum kutty paiyan
Athil kappal seithu mithakka vaippaan

---

## தோட்டம் நிறைய செடிகள்
## Thottam Niraiya Sedigal

தோட்டம் நிறைய செடிகள்
செடிகளிலே மலர்கள்
Thottam niraiya sedigal
Sedigalile malargal

மஞ்சள் நிறம் ஊதா நிறம்
வெள்ளை நிறம் சிகப்பு நிறம்
manjal niram ootha niram
vellai niram sigappu niram

காலையிலே மலரும்
வண்டுகள் வந்து அமரும்
Kaalaiyile malarum
Vandugal vanthu amarum

எங்கள் தோட்டத்தின் அழகை
கண்டு நாங்கள் மகிழ்வோம்
Engal veettu thottaththai
Kandu naangal maghizvoom

---

## காலையில் எழுந்தவுடன்
## Kalaiyil Ezhunthavudan

காலையில் எழுந்தவுடன்
ஆறு மைல் ஓடுவேன்
Kalaiyil ezhunthavudan
Aaru mayil ooduveen

கடற்கரை ஓரமாக
காற்று வாங்கி ஓடுவேன்
kadarkarai ooramaga
kaartru vaangi ooduveen

மாலை வெய்யலில்
மகிழ்ச்சியாக ஓடுவேன்
Maalai veiyalil ooduveen
Mazhichiyaga ooduveen

ஆற்றங் கரை ஓரமாக
பாடிக்கொண்டே ஓடுவேன்

Aarttan garai ooramaaga
Paadikkonde ooduveen

விளையாட்டு விழாவில்
வெற்றி பெற ஓடுவேன்
Vilaiyaattu vizhavil
Vetri pera ooduveen

---

## வானத்தில் பறக்கும்
## Vaanaththil parakkum

வானத்தில் பறக்கும் பிளேனைப் பார்
மாயமாய் மறையும் அழகைப் பார்
Vaanaththil parakkum pilenaip paar
Maayamaai maraiyum azhagaip paar

பூமியில் வந்து இறங்குது பார்
வேகமாய்ச் சீறி வருகுது பார்
Bhoomiyil vanthu iranguthu paar
Vegamaaich seeri varuguthu paar

கடலிலே கப்பல் மிதக்குது பார்
கரையைத் தேடி வருகுது பார்
Kadalile kappal mithkkuthu paar
Karaiyaith thedi varuguthu paar

கப்பலில் கொடியும் பறக்குது பார்
காற்றிலே அசையும் அழகைப் பார்
Kappalil kodiyum parakkuthu paar
Kaarttile asaiyum azhagaip paar

பெட்டி பெட்டியாய் செல்லும் ரயிலைப் பார்
இரும்புப் பாதையில் இயங்கும் காட்சியைப் பார்
Petty pettiyaay chillum rayilaip paar
Irumpup paathaiyil iyangum kaatchiyaip paar

இரவிலும் பகலிலும் இயங்கிடுமே
தூங்கும் போதும் ஓடிடுமே
Iravilum pagalilum iyangidume
Thuungum poothum oodidume

விதவிதமான வாகனங்கள்
விளையாட எனக்கு வாங்கித்தாருங்கள்
Vitha vithamaana vaaganangal
Vilaiyada enakku vaangiththaarungal

## வெங்கடேசா வெங்கடேசா
## Venkatesa Venkatesa

வெங்கடேசா வெங்கடேசா
வேண்டும் வரம் தரும் வெங்கடேசா
Venkatesa Venkatesa
Vendum Varam Tharum Venkatesa

நியூ ஜெர்ஸி வாசா வெங்கடேசா
நீதான் என்றும் எங்கள் ஈசா
New Jersey Vaasa Venkatesa
Neethaan Endrum Engal Eesa

கடல் தாண்டி வந்த வெங்கடேசா
கருணைக் கடலே வெங்கடேசா
Kadal Thandi vantha Venkatesa
Karunaik kadale Venkatesa

காத்தருள்வாய் வெங்கடேசா
கண்கொள்ளாக் காட்சியப்பா வெங்கடேசா
Kath tharulvai Venkatesa
Kan Kollak Katchiappa Venkatesa

## நியூ ஜெர்ஸிக் கிருஷ்ணா
## New Jerseyk Krishna

கிருஷ்ணா கிருஷ்ணா நியூ ஜெர்ஸிக் கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா நியூ ஜெர்ஸிக் கிருஷ்ணா
Krishna Krishna New Jerseyk Krishna
Krishna Krishna New Jerseyk Krishna

கிருஷ்ணா கிருஷ்ணா அழகானக் கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா அருள்புரியும் கிருஷ்ணா
Krishna Krishna azhagaanak Krishna
Krishna Krishna arul puriyum Krishna

கிருஷ்ணா கிருஷ்ணா கீதாவின் கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா ராதாவின் கிருஷ்ணா
Krishna Krishna Geethavin Krishna
Krishna Krishna Radhavin Krishna

கிருஷ்ணா கிருஷ்ணா எங்கள் ஊர்க் கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா குருவாயூர்க் கிருஷ்ணா
Krishna Krishna engal oork Krishna
Krishna Krishna Guruvaayoork Krishna

---

# ஒரு எழுத்து வார்த்தைகள்
# Oru Ezhuththu Vaarthaikal

கையிலே பையுடன் கடைக்குப் போனேன்
இங்கே வா என்று அம்மா அழைத்தார்
Kaiyile paiyudan kadaikkup poneen
Inge vaa endru amma azhaiththaar

மூன்றாவது தெருவில் மிகப் பெரிய தீ
அங்கே நீ போகாதே என்று அவர் சொன்னார்
Moondravathy theruvil migapperia thee
Ange nee poogathe endru avar chonnar

பூமாலை வாங்க கடைக்குச் சென்றேன்
பாமாலை ஒன்றையும் கையிலே தந்தார்
Poomalai vaanga kadikku chendren
Paamalai ondraiyum kaiyile thanthar

தை வெள்ளி என்பதால் கோவிலுக்குச் சென்றேன்
தையல் நாயகியை தரிசித்து வந்தேன்
Thai velli enpathal kovilukkuch chendren
Thaiyal naayagiyai tharichiththu vanthen

மையிட்ட கண்ணுடன் அக்கா அங்கு வந்தாள்
பையிலே பணத்தை வைத்துக்கொள் என்றாள்
Maiyitta kannudan akka angu vanthal
Paiyile panaththai vaiththukkol endral

பக்கத்து ஹோட்டலில் சாப்பிட வா என்றாள்
ஈத்தொல்லை தாங்காமல் திரும்பி ஓடி வந்தோம்
Pakkaththu hotelil chappida vaa endral
Eththollai thangamal thirumbi oodi vanthaal

பூமாலை பொட்டலத்தை கீழே வை என்றாள்
பாமாலையை படித்தபின் திரும்பிப் போ என்றாள்
Poomaalai pottalaththai keezhe vai endral
Paamaalaiyai padiththapin thirumbippo endral

பாக்கி உள்ள பணத்தை என்னிடம் தா என்றாள்

பயப்படாமல் திரும்பி நீ போகலாம் என்றாள்
Phakki ulla panaththai ennidam thaa endral
Bayappadamal thirumbi nee pogalaam endral

---

## டிங் டாங் டிங் டாங்
## Ding Dong Ding Dong

டிங் டாங் டிங் டாங்
கோயில் யானை வருகுது
Ding dong ding dong
Koil yaanai varuguthu

குழந்தைகளே பாருங்கள்
குதித்து ஓடி வாருங்கள்
Kuzhanthaigale paarungal
Kuthiththu oodi vaarungal

ஆடி ஆடி வருகுது
அந்தப் பக்கம் நில்லுங்கள்
Aadi aadi varuguthu
Anthapp pakkam nillungal

மணியை ஆட்டி வருகுது
வழியை விட்டு நில்லுங்கள்
Maniyai aatti varuguthu
Vazhiyai vittu nillungal

ஊரைச்சுற்றி வருகுது
ஓரமாக நில்லுங்கள்
Oorai chuttri varuguthu
Ooramaga nillungal

---

## எங்கள் மொழி நல்ல மொழி
## Engal Mozhi Nalla Mozhi

எங்கள் மொழி நல்ல மொழி
இனிமையாக பேசும் மொழி
Engal mozhi nalla mozhi
Inimaiyaga peesum mozhi

அன்னை சொல்லி தந்த மொழி
அன்பொழுக பேசும் மொழி

Annai cholli thantha mozhi
Anpozhuga peesum mozhi

பள்ளி சென்று கற்கும் மொழி
பக்குவமாய் பேசும் மொழி
Palli sendru karkkum mozhi
Pakkuvamai peesum mozhi

நாள்தோறும் உதவும் மொழி
நல்ல தமிழ் எங்கள் மொழி
Naalthorum uthavum mozhi
Nalla thamizh engal mozhi

---

## குட்டி குட்டி பாப்பா
## Kutty Kutty Pappa

குட்டி குட்டி பாப்பா
குதித்து வரும் பாப்பா
Kutty kutty pappa
Kuthiththu varum pappa

சின்ன சின்ன பாப்பா
சிரித்து வரும் பாப்பா
Chinna chinna pappa
Siriththu varum papa

தத்தி நடை போடும்
தூக்கிக்கொள்ளச் சொல்லும்
Thaththi nadai poodum
Thukkik kollach chollum

தோளில் சாய்ந்தவுடனே
தூங்கிவிடும் பாப்பா
Tholil saaintha vudane
Thuungi vidum pappa

---

## குருவி பறந்து வந்ததாம்
## Kuruvi Paranthu Vanthathaam

குருவி பறந்து வந்ததாம்
குழந்தை அருகில் நின்றதாம்
Kuruvi paranthu vanthathaam
Kuzhandai arugil nindrathaam

பாவம் அதற்கு பசித்ததாம்
பாப்பா பிஸ்கட் கொடுத்ததாம்
Paavam atharkku pachiththathaam
Papaa biscut koduththathaam

காலில் இடுக்கிக் கொண்டதாம்
கடித்துக் கடித்துத் தின்றதாம்
Kaalil idukki kondathaam
Kadiththuk kadiththuth thindrathaam

களைப்பு தீர்ந்து பறந்ததாம்
காலையில் திரும்பி வந்ததாம்
Kalaippu theernthu paranthathaam
Kalaiyil thirumbi vanthathaam

---

## ஆடு பாப்பா
## Aadu Pappa

ஆடு பாப்பா ஆடு
அழகுப் பாப்பா ஆடு
Aadu pappa aadu
Azhagup pappa aadu

பட்டுப் பாப்பா ஆடு
சிட்டுப் போலவே ஆடு
Pattup pappa aadu
Chittup polave aadu

குட்டிப் பாப்பா ஆடு
குதித்துக் குதித்து ஆடு
Kuttyp pappa aadu
Kuthiththuk kuthiththu aadu

சின்னப் பாப்பா ஆடு
சுற்றிச் சுற்றி ஆடு
Chinnap pappa aadu
Sutrich sutri aadu

---

## கை கொட்டு
## Kai Kottu

கை கொட்டம்மா கை கொட்டு
கண்ணே மணியே கை கொட்டு
Kai kottamma kai kottu
Kanne maniye kai kottu

தலையாட்டம்மா தலையாட்டு
தாமரைப் பூவே தலையாட்டு
Thaiyaattamma thalaiyaattu
Thamaraip poove thalaiyaattu

கால் வீசம்மா கால் வீசு
கரும்பே தேனே கால் வீசு
Kaal veesamma kaal veesu
Karumbe thene kaal veesu

உடம்பை வளைத்து ஆடம்மா
உல்லாசமாய் நீ ஓடம்மா
Udalai valaiththu aadamma
Ullasamai nee oodamma

---

## சாய்ந்தாடு
## Saainthaadu

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சந்தன மரமே சாய்ந்தாடு
Saainthaadamma saainthaadu
Santhana marame saainthaadu

கூத்தாடம்மா கூத்தாடு
குங்குமப் பூவே கூத்தாடு
Kooththaadamma kooththaadu
Kungumap poove kooththaadu

கோல மயிலே நீயாடு
குத்து விளக்கே நீயாடு
Kola mayile neeyaadu
Kuththu vilakke neeyaadu

சோலைக் குயிலே நீயாடு
சொகுசாய்க் கீதம் நீ பாடு
Solaik kuyile neeyaadu
Sogusaik geetham nee paadu

பச்சைக் கிளியே நீ பேசு
கொச்சை மொழிகள் நீ பேசு
Pachchaik kiliye nee peesu
Kochchai mozhigal nee peesu

பட்டே உந்தன் கை வீசு
பாங்காய் அழகாய்க் கை வீசு
Patte unthan kai veesu
Paangai azhahaik kai veesu

**கை வீசம்மா கை வீசு**
**கடைக்குப் போகலாம் கை வீசு**
Kaiveesamma kai veesu
Kadaikkup pogalaam kai veesu